

ஸ்ரீயை நம :

ஸ்ரீஸ்தலசயந பரப்ரஹ்மணே நம :

# ஸ்ரீப்ரஹ்மாண்ட புராணம்

க்ஷேத்திரகாண்டத்தில் அகஸ்தியஸம்வாத

ஸம்வாதமான

(மஹாபலிபுரமென வழங்கும்)

மல்லாபுரக்ஷேத்திரத்தின்

# மஹாத்மிய சுருக்கம்.

திருமலை சங்கபுரம்

ஈ. கை. வரதாசாரியர்

சுவாமிகளால்

ஸம்ஸ்கிருதத்தினின்று தமிழில்

மொழிபெயர்க்கப்பட்டு,

S. கிருஷ்ணசாமி பிள்ளை, S. பரசுராம பிள்ளை

இவர்களால் தங்கள்

சென்னை, பெயினி அண்டு கோ.,

அச்சுயந்திரசாலையில் பதிப்பிக்கப்பட்டு,

க. இராஜகோபாலாசாரி சுவாமிகளுக்கு

கயிங்கரியார்த்தமாக சமர்ப்பிக்கப்பட்டது.

1905.

உ. வே. சாமிநாதையர் நூல் நிலையம்

அடையாறு, சென்னை-20.

[illegible]

[illegible]

அவர்கள்

# [illegible]

ஸ்ரீவைபவம:

ஸ்ரீஸ்தலசயந பரப்ரஹ்மணே நம:

# மல்லாபுர ஸ்தலபுராண சுருக்கம்.

అన్విష్యమాణమనపాయవచోవిశేషైః
ఆరాధ్యమానమమరైస్తమసః పరస్తాత్ ।
తద్బ్రహ్మ సర్వశరణం స్థలశాయి
మల్లాపురే విజయతాం మునిభాగ్యభూమ్నా ॥

స్వోత్సంగరంగమహిపతినివేశధన్యాం
ఆశ్లిష్య గాఢమవనీం కమలాయతాంసాం ।
నిత్యం తదున్నతకరో ధరచుంబనోత్కః
కశ్చిద్విభాతి హృదయే కిటిసార్వభౌమః ॥

ఆరాన్నిరీక్ష్య చిదచిత్ప్రలమంబుజాక్షం
తం సర్వభోగ్యమతిసూన్నిజసూక్తిశౌర్యం ।
జ్ఞానప్రదీపహతచిత్తతమోవిశేష
స్తం భూతయోగినమహం కలయే గదాంశం ॥

శ్రీరంగలక్ష్మణమునిం శరణం ప్రపద్య
శ్రీశైలశంఖపురరాఘవసూరిసూనుః ।
మల్లాపురస్థలవిశేషపురాణసారాన్
వ్యక్తీకరోతి వరదస్సుధియాం ప్రసాదాత్ ॥

# புராணாரம்பம்.

ஸ்ரீயப்பதியாய், அவாப்த ஸமஸ்தகாமனாய், ஸமஸ்த கல்யாணகுணாகரனாயிருக்கிற ஸ்ரீமந்நாராயணனுடைய திவ்யகல்யாணகுணங்களை அடைவுபட அவ்விஷயமாகப் புகழ்ந்து சொல்லுகிற அனேகப் பிராமணர்கள் முன் ஒருகாலத்தில் கங்கையினது வடக்கரையிற் சேர்ந்து ஸம்வாதம் செய்கையில், சிலர் எம்பெருமானுக்கு பரத்துவமேயுளது, ஸௌலப்யமில்லை என்றும், சிலர் பரத்துவமும் ஸௌலப்யகுணமும் உண்டென்றும் சொல்லி வாதப்பட்டார்கள். அக்காலத்தில் தேவரிஷியான நாரதர் கங்கையில் ஸ்நாநம் செய்யவந்தார். அவரை உபயவாதிகளுங்கண்டு, நாரதரே! நீர் எல்லாவிஷயங்களிலும் தெளிந்தவராகையால் எங்களுக்கு எம்பெருமானுடைய ஸௌலப்யகுண விஷயமாக உண்டாயிருக்கிற சந்தேகத்தைத் தெளிவிக்கவேண்டுமென்று பிரார்த்திக்கையில் அந்த நாரதர் ஸ்ரீமந்நாராயணனுக்கு பரத்துவமே உண்டு, ஸௌலப்யகுணமில்லை என்று உறுதியாகச் சொல்லி, பரத்துவ ஸௌலப்பியங்களிரண்டும் உண்டென்று வாதிக்கிற பிராமணர்களைத் திரஸ்காரம் செய்துவிட்டு கங்கையில் நீராடப் போகையில் கங்கையானது குளிர்ந்தும, தெளிந்தும, ஆழ்ந்தும், பிரவஹிப்பதை விட்டு மிகவும் உஷ்ணமாகியும், கலங்கியும், கணுக்கால் அளவு ஆழமுள்ளதாகவும் காணப்பட்டது. நாரதர் இதைக்கண்டு இஃதென்ன விபரீதமென்று நினைத்து ஜலத்திலிறங்கி வருந்தி நீராடினார். உடனே அவருடைய ஹிருதயம் கலங்கிவிட்டது. அவர் அனேககாலம் அருந்தவங்களைச்செய்தும், அக்கலக்கம் தெளியவில்லை. அதனால் நாரதர் பரிதபித்து ஸத்தியலோகத்தில் தன் பிதாவாகிய சதுர்முகனை வணங்கி தந்தையே! எனது மனக்கலக்கத்தைத் தெளிவிக்கவேண்டுமென்று பிரார்த்திக்க,

பிரமன் ஞான திருஷ்டியினால் இவரது மனக்கலக்கத்தின் காரணத்தைத் தெரிந்துகொண்டு, பிள்ளாய், எம்பெருமானுடைய ஸௌலப்யகுண விஷயமாக நீ செய்திருக்கிற பாகவதாபசாரமே உனது மனக்கலக்கத்திற்கு காரணமாகிறது. ஸகல லோகங்களுக்கும் அதிபதியாய், ஆதிகாரணபூதனாய், எல்லாவற்றிலும் வியாபித்து நிற்பவனாய், எட்டவொண்ணாதநிலமான ஸ்ரீவைகுண்டலோகத்தில் நித்தியருக்கும், முக்தர்களுக்கும் அநுபவிக்கத் தக்கவனாய், முக்தியையளிப்பவனாய், இப்படி எல்லாவற்றினாலும் தனக்கு ஸமமானவனும், மேலானவனும் இல்லாதபடி மேன்மையைப் பெற்றிருக்கிற ஸ்ரீமந்நாராயணன், ஸௌலப்யகுணத்தினாலே திருப்பாற்கடலில் சாய்ந்தருளி, அடியார்களுடைய கூக்குரலுக்கு செவிகொடுத்துக்கொண்டும், பயிரிடுபவன் பயிரில் களை எடுப்பது போலே, தன்னை ஆச்ரயித்தவர்களுக்கு விரோதிகளான ராவண, சிசுபால, கம்ஸ, கைடபாதிகளை அழித்து சாதுக்களை ஸம்ரக்ஷணம் செய்வதற்காகவும், தனது ஸ்வபாவத்தை விடாமலே அனேகம் அவதாரங்களைப் பண்ணியும், சேதனர்களுக்கு ஸகல பலன்களையும் தந்தருளுகிறான். நாரதரே ஸகலருக்கும் சரணமாகிநிற்கிற ஸ்ரீமந்நாராயணனுக்கு பரத்வமும், ஸௌலப்யமும், ஸஹஜகுணங்களாகும், இவ்விருவகை குணங்களில் ஒன்றிராமல் போனாலும் எம்பெருமான் ஸர்வஸம்ரக்ஷகனாகான். இந்த ஸாரத்தை அவனையே ஸகலவிதகெதியாகப்பற்றின மஹான்களே அறிவார்கள் என்றும் இந்த ஸௌலப்யகுண விஷயமாக, பிரச்னைசெய்த பார்வதி தேவிக்கு ஈசுவரன் உபதேசித்ததாய், பின்பு அகஸ்தியருக்கு சூத பௌராணிகர் சொல்லியிருக்கிறதாய், பிரஸித்தமாயிருக்கிற (ஹரிஸௌலப்ய பிரகாசகம்) என்னும் மல்லாபுர க்ஷேத்திரத்தின் மாஹாத்மியத்தைக் கேட்டீராகில் உமது மனந்தெளியுமென்றும் சொல்லி இந்த மாஹாத்மியத்தைப் பிரமாண்டபுராணத்தில் எட்டு அத்தியாயங்களால் பிரமன் நாரதருக்கு பின்வருமாறு உபதேசித்தார்.

ஸ்ரீபுண்டரீகர் என்னும் ரிஷியானவர் சிறந்த பிராமணராய், தபோநிதியாய், எம்பெருமானுடைய திருவடிகளை திவ்வியமான தாமரை மலர்களால் ஆராதிப்பதையே விரதமாகக் கொண்டவராய், பூமியிலுள்ள திவ்விய தேசங்களிற் சென்று அவ்விடத்தில் எழுந்தருளியிருக்கிற எம்பெருமான்களை மஹா பக்தியுடன் ஆராதித்துக்கொண்டு வருகையில் கிழக்கு ஸமுத்திரத்தின் கரையிலுள்ள திவ்வியதேசங்களில் எம்பெருமானைத் தாமரை முதலிய அனேக விதங்களான புஷ்பங்களால் ஆராதித்து வராஹக்ஷேத்திரமான திருவிடவெந்தைக்கு வந்து அந்த திவ்வியதேசத்தில் பூவராஹ ரூபியாய், இடது மடியில் பூமிப்பிராட்டியாரோடு எழுந்தருளியிருக்கிற நித்தியகல்யாணப்பெருமாளை ஸேவித்து ஆராதித்து மஹா ஆநந்தத்துடன் அதற்கு தென் திசையில் மஹாரண்யத்தில் போகையில் இந்த ரிஷியானவர் அத்புதங்களான சுபசகுனங்களைக்கண்டு இந்த வனத்தில் ஸ்ரீய: பதியின் கருணையா லிப்பொழுதே, சிரேயஸ்ஸைப் பெறுவேன் என்று அவனது திருவடிகளையே தியானித்துக்கொண்டு வழியிலிருந்த ஒரு உத்தியானவனத்தைக்கண்டு, பற்பல விருக்ஷங்களாலும், நன்மணம் வீசுகின்ற நறுமலர் கொடிகளாலும், கதிரொளியும் உட்புகாதபடி தழைந்துயர்ந்து குளிர்ந்த நிழலைத்தருகிற சந்தனவிருக்ஷங்களாலும், திவ்விய ஸரஸ்ஸுக்களாலும், ரமணீயமாயிருக்கிற அந்த உத்தியானவனத்தில், விஷ்ணுசர்மாவென்கிற ஒரு பிராமணோத்தமன் பன்னிரண்டு திருமண்காப்புகளையும், துளசிமணி நளினாக்ஷ மாலைகளையும் அணிந்தவராய், எம்பெருமானைத் தியானித்துக்கொண்டு தபோநிதியாய் விளங்க, அவரைத் தண்டம்சமர்ப்பித்து அவர் கொடுத்த அர்க்கியம் முதலிய உபசாரங்களைப் பெற்று, விடைபெற்று, சற்று தெற்கே சென்று பார்க்கையில் அனேகமாயிரம் பொற்றாமரை மலர்களால் நிறைந்த ஒரு புஷ்கரிணியையும், அந்தக் கமலங்களினின்றும் காற்றினால் மேலெழுந்து ஆகாயத்தில் சூரியோதயமானாற்போல் பளபளவென்று பிரகாசிக்கிற புஷ்பதூளிகளையுங் கண்டு, அந்தப்

புஷ்கரிணியைக்கிட்டி, ஆ! ஆ! இதென்ன ஆச்சரியம், இந்தப் புஷ்கரிணியானது மாநஸமென்று பிரசித்தமான பொய்கையிலும் சிறந்திருக்கிறது, இதில் மலர்ந்திருக்கிற புஷ்பங்கள் ஒவ்வொன்றும் ஆயிரமிதழ்களை யுடையனவாய், சுவர்ணமயங்களாய், பரிமளத்தினாலே எல்லாருடைய மனதையும் வசப்படுத்துவனவாயிருக்கின்றன. இந்தப் புஷ்பங்கள் எல்லாவற்றையும் பறித்து எம்பெருமானுடைய திருவடிகளில் சமர்ப்பிக்கவேண்டுமென்று ஆநந்தபரவசராகி எழுந்து குதித்தார்.

அந்தக் க்ஷணத்தில் பக்தபராதீநனான எம்பெருமான் இந்தப் புண்டரீகரிஷியினுடைய ஜன்மசித்தமான பக்தி விசேஷத்தினாலே பிரஸந்நனாய், இவரைச் சடக்கென அநுக்கிரஹிக்கத் திருவுள்ளமாய், இவருக்கென்று ஒரு அவதாரம் செய்து இவர் பக்தியுடன் பறிக்கிற இந்தப் புஷ்பங்களைச் சாற்றிக்கொள்ள சங்கற்பித்துக்கொண்டு இவரை வேறு திருப்பதிகளுக்குப் போகாதபடி அப்பொழுது ஒரு அசரீரிவாக்கினாலே தடுத்து திருப்பாற்கடலில் வந்து தம்மை இந்தப் புஷ்பங்களாலே ஆராதிக்கக்கடவீர் என்று நியமித்தார். திருப்பாற்கடலுக்கு வருவது இந்த ரிஷிக்கு அசாத்தியமாகையால் தாமே அவரிருக்குமிடத்திற்கு எழுந்தருளிப் பிரத்தியக்ஷமாகத் திருவுள்ளமிருந்தது.

இவ்வித ஆகாசவாக்கைக்கேட்டு இப்படி தேவர்களும் புகழத்தகுந்த பெருமையைப்பெற்ற இந்தப் புஷ்பங்களை பூமியில் நமது பாக்கியத்தினால் பெற்றோமென்று மஹாநந்தபரிதராய், க்ஷீராப்திநாதனுக்கென்று அந்தப் புஷ்பங்கள் எல்லாவற்றையும் ஒன்று விடாமல் பறித்தார். அத்தருணத்தில் இவருடைய சமீபத்தில் பெரிதாகியிருக்கிற ஒரு முதலையானது நாக்கு அறுபட்டு மூர்ச்சித்து மிதந்தது. அதைத் தயையினால் மனமிரங்கிக் குளிரக் கடாக்ஷித்தார். பரமபாகவதரான இந்தப் புண்டரீகரிஷியின் கடாக்ஷமகிமையினாலே அந்த

முதலை மூர்ச்சை தெளிந்து முந்தின ஜனனத்தை நினைத்துச் சொல்லுகிறது. ஓ ரிஷியே! எனது குருவே! எனது ஆபத் பந்துவே! உமது கடாக்ஷத்தினால் எனக்கு சாபவிமோசனகாலம் வந்துவிட்டது என்று சொல்ல, ரிஷியானவர் ஆச்சரியப்பட்டு, உனது சரித்திரங்களையும் சாபகாரணத்தையும் சொல் என்றுகேட்க, முதலை சொல்லுகிறது.

பிரமரிஷியே! நான் முன் ஜன்மத்தில் மஹாராஜனாயும், மஹா தானங்களைச் செய்துகொண்டும், தருமத்தினால் பிரஜா பரிபாலனம் செய்துக்கொண்டும், மல்ல புரத்தில் வசித்தேன். அந்தப் பட்டணத்தில் எங்கள் குலதெய்வமாகிய பூவராஹப் பெருமாளை என்புத்திரன் இப்பொழுது கூட ஆராதிக்கிறான் என்று சொல்லுகையில், புண்டரீகரிஷியானவர் அதின் வார்த்தையை நடுவில் நிறுத்தி அந்த மல்லாபுரம் எங்கேயிருக்கிறது அதில் பூவராஹப்பெருமாள் எந்தக் காலத்தில் எந்த் பாகவதனுக்கு பிரத்தியக்ஷமானார் அதைச சொல்லென்று கேட்க

முநீந்திரரே, இந்தப் புஷ்கரிணிக்கு தெற்கில் ஒரு குரோசம் தூரத்தில் அந்த மல்லாபுரமிருக்கிறது, அது மஹாபுண்ணியநகரம், இரண்டு யோஜனை நிகளமும் அரை யோஜனை அகலமும் உடையதாய், சகல செல்வங்களாலும் நிறைந்து இந்திரலோகத்தை ஒத்திருக்கிறது. அதில் சகலசாஸ்திரங்களையும் கற்றுணர்ந்த பிராமணர்களும், அருந்தவ முனிவர்களும், சதுரங்கசேனைகளுடன் மஹாசூரர்களாயும், தார்மிகர்களாயும், ஸ்ரீவைஷ்ணவர்களாயுமிருக்கிற அரசர்களும், மற்றும் சகல ஜனங்களும் மகிழ்ந்து வஸிக்கின்றனர். கிரயவிக்கிரயங்களுக்காக அந்த நகரத்தில் மற்றொரு தீவிலிருக்கிற விலையுயர்ந்த வஸ்துக்கள் சமுத்திரவழியால் வந்து நிறைந்திருக்கின்றன. அந்த மல்லாபுரத்தை ஹரிப்பிரியன் என்கிற நான் பரிபாலனம் செய்தேன். இப்போது மல்லேசுவரன் என்று பிரசித்தனாய், தார்மிகனாயிருக்கிற சதாநந்த னென்கிற அரசன் ஆளுகிறான்.

அவன் என்னுடைய புத்திரன். நீதியுடன் பிரஜைகளை ரக்ஷிக்கிறான், சிரத்தையுடன் சாஸ்திரவிதிகளைத் தவறாமல் பூவராஹப்பெருமாளை மூன்று காலங்களிலும் ஆராதிக்கிறான்.'

அவ்விடத்தில் பூவராஹப்பெருமாள் எழுந்தருளின புண்ணியசரித்திரத்தைச் சொல்லுகிறேன். இதை என் பெரியோர்கள் சொல்லக் கேட்டிருக்கிறேன்.

## ஞானப்பிரான் வைபவம்.

புண்டரீக ரிஷியே! என்வம்சத்தில் நெடுநாள்களுக்குமுன் ஹரிசேகரசக்கிரவர்த்தி என்று பிரசித்தனான ஒரு அரசனிருந்தான். அவன் தர்மிஷ்டன், ஸத்தியவாதி, விஷ்ணுபக்தன், பராக்கிரமத்தில் மாந்தாதர்வினும் சிறந்தவன், அவன் இதற்கு வடக்கில் ஒருயோஜனை தூரத்திலிருக்கிற வராஹக்ஷேத்திரமான திருவிடவெந்தைக்கு தன்தாயாருடன் தினந்தோறும் சென்று பூவராஹ ரூபியாக எழுந்தருளியிருக்கிற நித்தியகல்யாணப் பெருமாளை மத்தியானகாலத்தில் சேவித்து ஒரு யோஜனை தூரமும் பின்பு வந்து தன் கிருகத்தில் நாலாயிரம் பிராமணரை ஆராதித்து அவர்கள் அமுதுசெய்த பின்பு புசிக்கிறது. இவ்விதமாக அநுஷ்டித்துவருகிற வராஹவிரதத்தில் இந்த மஹாராஜனுடைய பக்தியின் ஏற்றத்தையும் பாகவதாராதந விசேஷத்தையும், கண்டு, பிரஸந்நனான பூவராஹப் பெருமான் "விரும்பித் தொழுவார்க்கு மெய்யனாகையாலே" ஒரு நாள் அந்த மல்லாபுரத்திற்கு தாமே எழுந்தருளி வலது திருக்கையில் பூமிபிராட்டியாரைச் சிறுபெண்ணாகப் பிடித்துக்கொண்டு மற்றொருகையில் தடியூன்றிக்கொண்டு மிகவும் முதியவராய், பிரா

மணைரூபியாய், முதுமையாலே கால்களும் கைகளும் நிலைதவற தழுதழுத்தவார்த்தையுடன் தன்பக்தனை ஸ்ரீ ஹரிசேகரமஹா ராஜனது திருகத்திற்கு எழுந்தருளினார். அந்த மஹாராஜன் பர மபாகவதனாகையாலே பாகவதர்களைக் கண்டால் "தென்றல் நிலவுகளையும் அபிமத விஷயங்களையுங் கண்டாற்போல" உகந்துகொள்ளுகிறவரென்று அவருக்கு மஹாசந்தோஷமாயிருக் கிற விருத்த ஸ்ரீவைஷ்ணவரூபத்தைத் திருவுள்ளம்பற்றி எழு ந்தருளின அர்த்த நித்தியகல்யாணப் பெருமாள் அவர் திருகத் தின் நடுவில் எழுந்தருளுகையில் அவ்வரசனும் கண்டபோதே எதிர்கொண்டுவந்து தாயாரும் தானுமாக விருத்தரைக் குசல பிரச்னம் செய்து ததியாராதனத்தைத் திருவுள்ளம் பற்றி இவ்விடத்தில் எழுந்தருளி யிருக்கவேண்டுமென்று பிரார்த்தி த்ததான் அநுஷ்டிக்கிற விரதத்தின்படியே திருவிடவெந்தை க்குப் போகயத்தனப்படுவதைக் கடாக்ஷித்து, பெருமான் அரு ளிச்செய்கிறார். மஹாராஜனே! நான் அரக்கிழவன், வழியும் வெகு தூரமானதையால் நடந்து வந்து அதிகமாக சிரமத்தை அடைந்திருக்கிறேன். இந்தசிறுபெண்ணும் அப்படியே பசியி னால் உடிக்கடிமூர்ச்சை அடைகிறாள். ஆகையினாலிப்படி வருந்துகிற எங்களுக்கு எவ்வளவு சீக்கிரத்தில் ஆஹாரத்தைக் கொடுத்தீரானால் பிராணன் போகாமலிருக்குமோ அவ்வளவு காலத்தில் ஆஹாரத்தைக்கொடுமென்று பிரார்த்திக்கிற விரு த்த ஸ்ரீவைஷ்ணவரை அரசன் நல்வார்த்தைசொல்லி சுவாமீ! அடியேன் பூவராஹப்பெருமானை ஆராதித்துவிட்டு இதோவரு கிறேன் அந்த விளம்பத்தைக்கருணையுடன் க்ஷமிக்க வேண்டும் என்று விண்ணப்பம் செய்தார். அதைக்கேட்டு பெருமாள் அர சனைநோக்கி மஹாராஜனே! இந்தப்பெண் சிற்றம் சிறியவள், நாம் தள்ளாதகிழவனாயிருக்கிறோம், வழிநடந்து வந்தோம். இனி முகூர்த்தகாலம் சென்றால் எங்களுக்கு பிராணஸம்சயம் உண்டாகும் என்று இளைத்து வருந்திச்சொல்லுகிற அந்த விருத்தருடைய வசனத்தைக்கேட்டு அவர்களுடையசிரமத்தை யும் பார்த்து ஹரிசேகரமஹாராஜன் தருமகுக்ஷ்மங்களையும்,

பாகவதாராதனத்தின் பெருமையையும் அறிந்தவராகையால் தங்கள் குலதெய்வமான பூவராஹப்பெருமாளாகவே இவரைத் தியானித்து மானசிகமாக ஆராதனத்தைச் செய்து அந்தக் கிழவனை அக்கன்னிகையுடன் அப்பொழுதே அந்தப் புரத்தில் ரத்தினசிம்மாசனத்தில் எழுந்தருளச் செய்து அவர்களுக்கெதிரில் ஸ்வர்ணபாத்திரத்தில் எல்லா வியஞ்சனங்களுடன் அறுசுவையோடு கூடின திவ்வியமான அன்னத்தை விசேஷமாக சமர்ப்பித்து பக்தியினால் கண்களை மூடிக்கொண்டு, அமுதுசெய்தருள வேண்டுமென்று பிரார்த்தித்து பின்பு தண்டம் சமர்ப்பித்து எழுந்திருந்து பார்க்கையில்,

శ్లో॥ దదర్శ తావాసనస్థౌ తంసాక్షాత్కోలరూపిణం ।
దక్షిణాంకోద్ధృతాం కన్యాం మంజులాంగవసుంధరాం ॥

సహస్రభానుసంకాశం స్వయంసదనమాగతం ।
సాక్షాద్వరాహం వైకుంఠం ప్రాంజలిః ప్రణనామహ ॥

ఉత్థాయోత్థాయ సంతోషా న్నత్వానత్వా పునఃపునః ।
తుష్టావ పరసంప్రీతః సరాజా సహబాంధవైః ॥

அந்த விருத்தனை தம் குலதெய்வமான வராஹப்பெருமாளாகவும், அதிசுந்தரியாய்ப் பிரகாசிக்கிற அந்த மங்கையைப் பெருமாள் வலது மடியில் எடுத்துக் கொண்டிருக்கிற பூமிப் பிராட்டியாராகவும் ஹரிகேசமஹாராஜன் கண்டு முகமலர்ந்து ஆனந்தக்கடலில் மூழ்கி, இதென்ன பாக்கியம் பெற்றோம், மஹாயோகிகளுக்கும் துர்லபனாய், சித்தியருக்கும் முக்தருக்கும் சுலபனாயிருக்கிற சர்வேசுவரன் அல்பனாயிருக்கிற அடியேனிருக்குமிடந்தேடி, வாகனம் முதலான பரிகரங்களில்லாமல் எழுந்தருளியிருந்து அடியேனைக் கொண்டு திருவாராதனத்தை செய்வித்துக்கொள்ளும்படியான செளலப்பிய

குணத்தைவெளியிட்டுக்கொண்டு மங்கலமயமான பூவராஹப்பெருமாளை சேவைசாதிக்கப் பெற்றோமென்று அடங்காத சந்தோஷத்தினாலே அடிக்கடி தண்டம் சமர்ப்பித்துத்தன் பந்துக்களுடன் ஸ்துதிசெய்தார். அக்காலத்தில் ராஜாவினுடைய ஆண்மனைக்கு வெளியில் புசிப்பதற்கு வந்திருக்கிற பிராம்மணர்களெல்லாரும் பெருமாளாஜ்ஞை செய்தருளின காலத்தில்பூரணமாக புஜித்தவர்கள் போல திருப்தி அடைந்து இதென்ன ஆச்சரியமென்று ஒருவரோடொருவர்சொல்லிக்கொண்டு இவ்வாச்சரியத்தை அரசனுடன்சொல்லவேண்டுமென்று அந்தப்புரத்தில் வந்துபார்க்கையில் அவ்விடத்தில் அநேகமாயிரம் இரத்தினங்களாலிழைக்கப்பட்டதாய், அக்கினியை நிகர்த்ததாயிருக்கிற பவழத்தூண்களாலே பிரகாசிப்பதாய், முத்துக்களால் செய்யப்பட்ட மேற்கட்டியினின்று தொங்குகிற ரத்தின புஷ்பங்களால் அலங்கரிக்கப்பட்டிருக்கிற ரத்தினமண்டபத்தில் உத்தமமான, ரத்தினஸிம்ஹாஸனத்திலிருந்து, ரத்தினமயமான சுவரில் சாய்ந்து தனது வலதுமடியில் பூமிப்பிராட்டியை பரித்துக்கொண்டு ஹரிசேகரமஹாராஜனாலே உபாஸிக்கப்பட்டு விளங்குகிற பூவராஹப்பெருமாளைக் கண்டு அவருடைய ஸௌலப்பிய குணத்திலீடுபட்டு வேதங்களால் சக்தியுள்ள வரையிலும் ஸ்துதித்து "வாய் அவனையல்லது வாழ்த்தாதென்றிருக்கிற நாம்," "அவனைப்பல்லாண்டு பாடப்பெற்றோம்," இப்படி 'இதோர் நன்னாள் வாய்த்ததே'யென்று, மஹானந்தத்தையடைந்து பெருமாளை உத்தேசித்து லோகநாதனை வராஹஸ்வாமியே! யோகிகள் இடைவிடாமல் அநுபவிக்கவேண்டுமென்று "ஒருநாள் காணவாராயென்றும், காண்பது என்ஞான்றுகொலோ" வென்றும் ஆசைப்படத்தக்க தேவரீரை திருவாய்ப்பாடியில் கோபாலர்கள் அநுபவித்தாற்போலே அநுபவிக்கிற அடியோங்களும் அதிசுந்தரமான இந்த திவ்யரூபத்தைக் கண்ணாரக்கண்ட ஹரிசேகரமகாராஜனும் தன்னியர்களானோம். இவ்விதமாகவே இந்த க்ஷேத்திரத்தில் எல்லோரும் அநுபவிக்கும்படி எக்காலத்திலும் எழுந்தருளி யிருக்கவேணு

மென்று பிரார்த்திக்கையில் பெருமாள் அப்படியே செய்கிறே னென்றும், இதற்குமேற்கில் ஐந்தாயிரம் யோஜனை தூரத்தில் ஸ்ரீ ஹஸ்திகிரியில் பிரமன்செய்யப்போகிற அசுவமேதத்தில் ஸ்ரீவைகுண்டத்திலிருந்து நமக்கு புண்ணியகோடிவிமானம் வரப்போகிறதாகையால் அதற்காக ஏற்குருகமாக யெழுந்தருளியிருக்கிறேமென்று அருளிச்செய்தார். அந்தப்புஷ்பவராஹப்பெருமாளை ஹரிசேகரமஹாராஜன் நெடுநாள் ஆராதித்தார். அவர்தகுலத்தில் பிறந்தவர்களான என்வரையிலுமிருந்த அரசர்கள் ஆராதித்து வந்தபடியே இப்பொழுது எனது குமாரன் ஆராதிக்கிறான். முனிவரே மன்பிதாவான ஹரிசந்திரமஹாராஜன் இருபத்தையாயிரம் வருஷகாலம் ராஜ்யபரிபாலனம் செய்து மூன்றுவயது பிள்ளையாயிருந்த எனக்கு ராஜ்யத்தைக்கொடுத்துவிட்டு அருந்தவம் செய்து ராஜரிஷியாகி தெய்வலோகத்தை அடைந்தார். பின்பு நான் அனேக தானங்களையும் வெகுவிதங்களான யக்ஞங்களையும் செய்துகொண்டு நீதிதவறாதபடி ராஜ்யத்தைப் பரிபாலிக்கையில் ஒரு பிராமணர் பரமபாகவதராய் விளங்கிக்கொண்டு என்னைக்கிட்டி தீனத்தையுடன் அரசனே நீ தருமத்தை செய்கிறாய், ஒரு புருஷனுக்கு வேண்டிய அன்னத்தை ஆமமாக எனக்கு தினந்தோறும் கொடுக்கவேண்டுமென்று யாசித்தார் அப்பொழுது நாம் வெகுவாக தானம் செய்கிறேமென்று கொவித்து அந்தப்பாகவதனுக்கு அலக்ஷியமான உத்தரத்தை சொன்னேன், கேட்டதையும் கொடுக்கவில்லை, அவ்வாபமானத்தால் வருந்தினவராய் நீ முதலையாகக் கடவை என்று சபித்தார். பின்பு நானும் எனக்காக இந்தப்பட்டணத்திலுள்ள ஸ்ரீவைஷ்ணவர்களும் சாபவிமோசனத்தைப் பிரார்த்திக்கையில் அந்தபாகவதர் சிலகாலம்சென்றபின்பு இந்த முதலைக்கு பரமபாகவதனுடைய கடாக்ஷமும், ஸம்பாஷணமும், நேரிடும், அப்பொழுது இந்தசாபமொழியுமென்று சொன்னார். அப்பொழுதே இந்த முதலைரூபம் வந்துவிட்டது, இந்தப்பொற்றாமரைக்கயத்தை அடைந்தேன். இப்படியாக முப்பத்தீராயிரம் வருஷத்தைக் கழித்தேன் வெகுவாக பிராணிகளைப்

MAHAMAHOPADHYAYA
Dr. U.V. SWAMINATHA IYER LIBRARY

புசித்தேன். இப்பொழுது கூட உம்மைக்கண்டு புசிக்கவந்து உமது பாதமென்று நினைத்து உமக்கு அருகலிருந்த தாமரைத் தண்டைக்கடித்தேன் அதனால் எனது நாக்கு அறுபட்டு மிதந்து உமது கடாக்ஷத்திற்கு பாத்திரமாகி உமது கிருபையினால் இச் சரீரத்தைவிட்டு, ஸ்வர்க்கத்தை அடைகிறேனென்று பிரார்த்தி த்து அப்படியே புண்டரீகமுனிவருடைய கருணையால முதலை ரூபமொழிந்து ஸ்ரீவிஷ்ணுமயமான திவ்யரூபத்தைப் பெற்று சுவர்க்கத்தை அடைந்தான். பின்பு புண்டரீகரிஷியா னவர் பறித்த தாமரை புஷ்பங்களை கூடையில் செங்கழுநீர் புஷ்பங்களை சேர்த்து தேவரீருக்குரிய பெருமானுக்கேற்ற தான திவ்யமாலையாகத் தொடுத்து சிரமேல் தரித்துக்கொண்டு ஆகாச வாக்கினபடி திருப்பாற் கடலுக்குப் போக யோசி த்து கிழக்கில் சற்றுதூரம்சென்று வழியில் தடையாயிருக்கிற சமுத்திரத்தைக்கண்டு பயந்து என்னசெய்வோம், திருப்பாற் கடலுக்கு எப்படி செல்வோம், இந்த கடலைத் தாண்டிச்செல்வது போகவொண்ணாதே யென்றெண்ணி சிந்தையின் திருவடிமேல் நிலைதவறினவராய் எழும்புவதும் முழுகுவதும் கூத்தாடுவதுமாக அலையோரத்தில் சஞ்சரித்து பின்பு இந்த அலைகடலைத் தாண்டி ப்போவோம். அல்லது ஜலத்தைக் கைகளாலவாரி இறைத்து வடியவைத்துச் செல்வதே தகுமென்று உறுதிபண்ணிக்கொ ண்டு அருகில் உயர்ந்ததாக, கரையைக்கட்டி கடலில் மேற்கு முகமாக நின்றுகொண்டு நீரை இறைத்தார். இப்படி இறைப் பது மிளப்பாறுவதுமாக ஒரு வருஷகாலம சென்றது, அப் பொழுது கரையில் தான் வைத்திருக்கிற புஷ்பமாலையானது வாடிப்போகுமே என்று அதைப்பார்த்து துக்கிதது பின்புறத் தில் உலகத்தை யடங்க விழுங்குவதுபோல் விளங்குகிற கட லைக்கண்டு கலங்கி பின்னும அந்தமாலையைப பார்த்து பரிதபி த்து இந்தப் புஷ்பங்கள் வாடிப் போகிறதற்கு முன்னமே திருப்பாற்கடலில் சென்று பெருமானுடைய திருவடிகளில் சமர்ப்பித்தாலல்லது நிற்கமுடியாத சிரத்தை வளர்ந்து அதற்கு தடை நேரிட்டபடியால் ஸஹிக்கமுடியாத வ்யஸனமுடையவராகி யிருக்கிற இவரை

யுடையவராய், கைகால்கள்முதலிய இந்திரியங்களின் சக்தியற்றமையால் தன் பிரயத்தினத்தாலே க்ஷீராப்திநாதனுடைய ஆராதனத்தைச் சாதித்துக்கொள்ள ஒருவித உபாயமுமில்லாதவராய் நிற்கிற புண்டரீகரிஷியானவர் அடியார்களுடைய ஸகலவினைகளையும் ஒழிப்பவரான ஸ்ரீய:பதியின் கருணையைத் தானே தனது இஷ்டசித்திக்கு உபாயமென்று உறுதியாய்நிச்சயித்தார். அதாவது கருணாநிதியான எம்பெருமானே கெதியற்றுநிற்கிற நமக்கு இஷ்டசாதனமான உபாயமாய்நின்று நமது இஷ்டத்தைத்தரவேண்டுமென்று பிரார்த்தித்தார் ஸகலமான சராசரங்களையும தன்வசத்தில் வைத்துக்கொண்டிருப்பவரும், ஸகலபிரபஞ்சத்திலும் உள்ளும் புறமும் வியாபித்து நிற்பவருமான அந்த எம்பெருமானுடைய கிருபையைத்தவிர அவன் திருவடிகளில் இந்தப்புஷ்பங்களைச் சமர்பிக்க உபாயமில்லை என்கிற மஹாவிசுவாசத்துடன் அவனைச் சரணமாகப்பற்றினவராகையால் பயமற்றுதான் கடலை இறைப்பதையொழித்து நின்றார்.

[illegible]।
[illegible]॥

அந்தஸமயத்தில் க்ஷீராப்திநாதனென பெருமான எல்லாச் சேதநருக்கும் தனது ஸௌலப்யகுணத்தை வெளியிடுவதற்கு இதோர் நன்றுன்வாய்த்ததென்று மனமகிழ்ந்து ஸ்ரீகஜேந்திராழ்வானை ரக்ஷிக்க எழுந்தருளுகையில் பெரியதிருவடிவேகமும போராதேயிருந்தமையை நினைத்து அவரையும்விட்டு சரணமடைந்து நிற்கிற புண்டரீகரிஷியிருக்குமிடத்திற்கு திருப்பாற்கடலிலிருந்து தாமேவ்ருத்தரான பிராமணராக எழுந்தருளினார், நம்மை ஸகலரும் அநுபவிக்கும்படி சுலபனாக எழுந்தருளுகிறோமாகையால் சங்கசக்கிரங்களைத் தரித்துக்கொண்டிருக்கிற ரூபமநம்மைப் பரமாத்மாவாகக் காட்டும்; அதனால் அம்முனிவருக்கு இஷ்டசித்தியுண்டானாலும் நம்மைச்சரணமாகப் பற்றி நிற்கிற ரிஷிக்கு என்செய்யப்போகிறோம், சடக்கெனக் கிட்டி அவருக்கு துணையாயிருந்து கடலை இறைப்போமா,

நல்வார்த்தைகளைச் சொல்லுவோமா, அவரது சிரமத்தை எப்படி தீர்ப்போம், எப்படி நாம் குறைதீர்ந்தவர்களாவோம் என்றிருக்கிற நம்முடைய இஷ்டம் சித்திக்காதன்றோ. ஆகையால் நமக்குப்பிரியமாய், ரிஷிக்கும் தென்றல் நிலவுகளைப்போலே போக்கியமாயிருக்கிற வ்ருத்த பிராமணரூபமே இக்காலத்தில் நமக்குதகுமென்கிற திருவுள்ளத்தினால் அந்த ரூபத்தை அங்கீகரித்து, கண்டபோதே தாபங்களைத் தணிப்பதான நீருண்ட மேகம் போன்ற திருமேனியில் அதற்கு அழகைத் தருவதாயிருக்கிற திவ்வியபீதாம்பரத்தை தரித்தவராய், ஆசிரிதனையோடிவந்து கண்ட ஆநந்தத்தினாலே மலர்ந்த தாமரைமலர்போல் விசாலங்களாயிருக்கிற அழகிய திருக்கண்களையுடையவராய், தனக்கு ரிஷியினிடத்திலிருக்கிற பிரீதி விசேஷத்தைக்காட்டுகிற புன்னகையையுடையவராய் புண்டரீகரிஷியை கிட்டிவந்து நிற்கையில், ரிஷியானவர் கொஞ்சம் சிரித்தமுகமாயிருக்கிற அந்த வ்ருத்தரைப்பார்த்து நம்மைப் பரிஹாஸம் செய்யவந்தாரென்று நினைக்கையில், தள்ளாதக்கிழவா முழுநாளளவும் நீண்டு நுண்டு தொங்குகிறதம் திருக்கையில் தடியை யூன்றிக்கொண்டு முனிவரை நெருங்கிச்சென்று பிரியவசனங்களாலே முதலில் க்ஷேமத்தை விசாரித்து பின்பு ரிஷியே! நாமிகவும் இளைத்து துக்கித்தவரா யிருக்கிறீர் இதென்ன சமுத்திரத்தை இறைத்திருக்கிறது? இந்தத்தாமரைபுஷ்பமாலைகளை யார் இங்குவைத்தார்கள்? எதற்காக இவ்விடத்திற்கு கொண்டுவந்தார்கள்? இவைகளைச்சொல்லுமென்று கேட்கையில் ரிஷியானவர் பிராம்மணரே! நீர் இவைகளைக்கேட்டு என்ன ஆகப்போகிறது, தடியூன்றிக்கொண்டிருக்கிற கிழவரே! உம்மால் எனது துக்கம் ஒழிக்கமுடியாது, நீர்வந்தவழியேபோம் என்று சொல்ல, அதைக்கேட்டு புண்டரீகாக்ஷனான கிழவர் ஓ ரிஷியே! நீ யாரா? இந்தத்தாமரைமாலை என்ன? இந்தஜலமானது எது நிமித்தம் இறைக்கப்பட்டிருக்கிறது? இந்தஜலமானது உப்பாகையாலே பயிர்களுக்குத் தகாதே, சமுத்திரக்ஷப் பருவகாலமில்லாத காலங்களில் ஸ்பர்சிக்க அதிகாரமில்லையே, நீர்வேஷத்தினால் பிராமணனாகவி



ளாகுகிறீர். அப்படிப்பட்ட உமக்கு இந்தபிரயத்தினம் எப்படி உண்டாயிற்று, விருதாவாக சிரமத்தை அநுபவிக்கிறீர்; உமது மனதில் என்னநினைத்து இவை எல்லாவற்றையும் செய்கிறீர் ? உண்மையைச்சொல்லுமென்று கேட்டார். அப்பொழுது புண்டரீகமுனிவர் நிமிர்ந்து அந்த வ்ருத்தருடைய தேஜஸ்ஸையும் திருமுகமண்டலத்தின ழகையும் நன்றாக அடிக்கடிப்பார்த்து அவ்வழகிலீடுபட்டு மனமகிழ்ந்து பிரீதியுடன் பதில் சொல்லுகிறார். ஓ பிராமண வ்ருத்தரே ! நான் சொல்வதை ஸாவதானமாய் கேளும், நான் வீணாக இறைக்கிறேனென்று நினைக்கிறீர். ஒரு பிரயோஜனமில்லாமல் இதில் நான் யத்தினப்படவில்லை. இதிற் எனக்கு எல்லாவற்றிற்கும் மேலான பிரயோஜன மிருக்கின்றது. இதைக் கேட்டு என்பதுவயது சென்ற நீர் என்ன செய்யப்போகிறீர்? ஆனாலும் அன்புடன் கேட்கிற உமக்குபதில்சொல்லுகிறேன். நான் புண்டரீகன் என்கிறபெயரையுடையவன், எனக்கு விஷ்ணுவின் திருவாராதனமே முக்கியகாரியம்; புண்ணியகரமான இந்த தேசத்திற்குவந்தேன், இவ்விடத்தில் ஸ்வர்ணத்தோடொத்திருக்கிற அனேகமாயிரம் தாமரைமலர்களால் நிறைந்த ஒருபுஷ்கரிணியைக்கண்டேன், இந்தப்புஷ்பங்களினழகையும, பரிமளத்தையும், பார்த்தநுபவித்து அடங்காத ஆநந்தத்துடன்பெருமாளுடைய ஆராதனத்திற்காக பறிக்கையில், இவகளைப்பரித்துதிருப்பாற்கடலிற்சென்று அந்தப்பெருமாள் திருவடிகளில் சமர்பிக்கக்கடவை என்று ஆகாயத்தில் தேவதைகள் சொன்னார்கள். அப்படியே அந்தப் புஷ்பங்களை எடுத்துக்கொண்டு திருப்பாற்கடலுக்கு பிரயாணமாய் வந்து வழியில் தடையாயிருக்கிற இந்தக்கடலை இறைத்தேன். கடலானது வடியாமல் வளருகிறது. இறைத்த ஜலம் கடல் போலாயிற்று, இப்பொழுது ஒருவருஷமிறைத்தும் இருபுறத்திலும் ஜலத்தைக்கண்டேனேயல்லது கடலானது வடியவில்லை. பெருமாளுக்கு ஸமர்பிக்காமலே புஷ்பங்களின் அழகும் பரிமளமும் அழிந்துவாடிப்போகுமே என்றுபெருஞ்சிந்தையினால் துக்கிக்கிறேனென்று ரிஷிசொல்லக்கேட்டு, இன்னமும்

இவரைப் பரிசோதிக்க எண்ணங்கொண்டு வ்ருத்தர் கேட்கிறார் ரிஷியே! நீர்பரமபாகவதராயிருக்கிறீர். ஆனாலும் இந்தப்பெருங்கடலானது உமக்கு தாண்டமுடியாது அதற்கா- பிராணனை ஒழிக்கலாமா? கடல் இறைத்துவடியுமா? இதென்னமதி மயக்கம், திருப்பாற்கடலைத்தவிர மற்ற ஸ்தலங்களில் பெருமாளைச்சுலபமாக ஆராதிக்கலாம் என்று சொன்ன உடனே ரிஷியானவர் துக்கித்தவராய் ஓய் பிராமணரே! கேளும் இந்தப் பொற்றாமரைமலர்களைத் திருப்பாற்கடலில் திருக்கண்வளருகிற பெருமாள் திருவடிகளில் சமர்ப்பிக்காமல் நான் பிழைக்கிறதில்லை, இந்தப்புஷ்பங்கள் வாடாமலிருக்கிறவரைக்குமே என் பிராணன்களுமிருக்கும். இதுவே எனது நிச்சயம், இந்த நிலையைத்தவறமாட்டேன், எனக்கு இவ்விஷயத்தில் ஸஹாயம் செய்வது தவிர மற்றொன்றும் சொல்லவேண்டாம் தள்ளாதகிழவனாய் தடியூன்றித்திரிகிற உம்மால் என்ன ஆகப்போகிறது, சுகமாய்போம் என்று சொல்லி, ரிஷிமௌனமாயிருக்கையில், வ்ருத்தரூபியான பெருமாள் இந்தரிஷி தனக்கும் செய்யப்போகிற திருவாராதனத்தை முக்கியமான நைவேத்திய பரியந்தமாக்கி முடித்துக்கொள்ளத் திருவுள்ளமாய், ரிஷியைநோக்கி அருளிச்செய்கிறார்.

ரிஷியே! உமக்கு மங்களமுண்டாகட்டும், நான் நெடுநாள் சென்ற கிழவன், வழிநடந்து வந்ததனால் சிரமப்பட்டிருக்கிறேன். சிகவும் வேகமாக எனக்கு அன்னபானாதிகளைக்கொண்டு வாரும், உமக்கும் நான் எனது சக்தி வஞ்சனையில்லாமல் இது விஷயத்தில் ஏதோ ஸஹாயம் செய்கிறேன். இந்தக்கிழவனால் என்ன ஆகுமென்று நினைக்கவேண்டாம். என்னைப்பாரும் என்றுசொல்லி கைத்தடியைக் கீழேவைத்து இடுப்பில் உத்தரீயத்தை இழுத்துக்கட்டி கடலிலிறங்கிக் கைக்கொண்டமட்டும் ஜலத்தைவாரி மெதுவாய் கரையில் இறைக்கையில் ரிஷி பார்த்துக்கொண்டிருக்கையில் தானே அந்தக் கடலானது ஒரு குரோசதூரம் வடிந்தது.

புண்டரீகரிஷியானவர் ஆச்சர்யமடைந்து பிரஸாதத்தைக் கொண்டு வரும்படி நியமிக்கவேணுமென்று பிரார்த்தித்தார், பெருமாளும் இவரை அநுக்கிரஹிக்க வேசமுண்டாய் சீக்கிரமாய் அன்னத்தைக்கொண்டு வாருமென்று நியமிக்கையில், ரிஷியானவர் முன் முதலிசொல்லிருந்த மல்லாபுரத்திற்கு ஓடி ஒரு யஜ்ஞசீலரான மஹாபிராமணருடைய கிருகத்தில் சுசியான அந்நத்தை யாசித்து ஸகலமானவியஞ்சனங்களோடு பூர்ணமாகவபித்து அதைச்சிரஸில் ஏந்திக்கொண்டு இந்த வ்ருத்தரை வெகு தூரத்திலிருந்து பார்த்துக்கொண்டே வேகத்துடன் சமீபத்தில் வருகையில் அந்த வ்ருத்த ஸ்ரீவைஷ்ணவனைத் தாமாராதிக்கவேண்டிய பெருமாளாகவே தாசித்தார்.

స్థలేశయానం విహ్వరం ధృత్వా వక్షసి దామ తత్।
నీలజీమూతసఙ్కాశం నిర్ద్వన్ద్వామ్భోజలోచనమ్॥
మందస్మేరం మహాబాహు ముపధాయ సహేలదే।
శయానమాజానుభుజం కటాక్షామృతవర్షిణమ్॥
పాదౌ ప్రసార్య పద్మాభౌ తమాలవిటపోపమౌ।
రమ్యాభ స్తమ్భోరుగమ్భారా రాజన్తౌ హేమవాససా॥
దదర్శ పూర్వాప్త్రిముఖం పుండరీకః పురుప్రియం।

மனிசர்க்காய் நாட்டில் பிறந்து படாதன படுங்காலத்திலும் தரையில் சயனிக்காதவராய், நன்மணம், மென்மை, குளிர்ச்சி முதலிய மஹாகுணங்களைப் பெற்றிருக்கிற திருவனந்தாழ்வானென்கிற மெத்தையில், பெரிய மேன்மை மீதூற சயனித்திருந்த பெருமான் தனது பக்தனை அநுக்கிரஹிக்கவேண்டிய தவலையாலே அவன் தன்னைக்காணகருதி வருந்தி நின்ற தரையை உகந்து அதில் சுலபனாய் சயனித்து அவன் தனக்காக ஆதரித்து வைத்திருந்ததாய் தன்சங்கற்பத்தாலே வாடாமலிருந்த தாமரைப் புஷ்பமாலிகையைத்தாமே எடுத்து அதினழகையும் பரிமளத்தையுங்கண்டுகளித்து அதைத்தன் திருமார்பில் வசிக்கிற தன் பிராணநாயகியான பெரியபிராட்டியாருக்கு ஏற்றதாக

நினைத்து அவனுக்கு மாலையிடுகிறவர்போல் திருமார்பில் சாத்திக்கொண்டு அவ்வானந்தத்தினால் திருமேனி பருத்து அழகுமிகுந்திருக்கையாலே சௌபரிமூர்த்தியாய், வர்ணம், பரிமளம் முதலான குணங்களால் பெரியபிராட்டியாரை நிகர்த்துத் தன்மனதை வசப்படுத்துகிற அந்த மாலையைத் தனக்குச்சாத்துவதற்குமுன் புண்டரீகியத்னனாயிருந்தது போலந்தமாலையைத் தாமோடி வந்து எடுத்து அன்புடன் மாரிலணைத்துச் சாத்திக்கொள்ளுகிறவரையில் பெருமாள் மஹாநந்தத்தையைப் பெற்றிருந்தாராகையால் விதைச்சாற்றிக்கொண்ட உடனே சௌம்யமான யௌவனப்பருவத்தை அடைந்து, கண்டபோதே தாபங்களைத் தணிப்பதாகிய திரண்ட மேகத்தை நிகர்த்தவராய், அப்பொழுது மலர்ந்து சுந்தரமான தாமரை மலரையொத்து நீண்டுவிசாலங்களாயிருக்கிற திருக்கண்களையுடையவராய், திருமுகமண்டலமாகிற சந்திர பிம்பத்திற்கு நிலவுபோல் பிரகாசிக்கிற புன்னகையினால் குளிர்ந்ததான தன் திருவுள்ளத்தை வெளியிடுகிறவராய், சுகநித்திரையைச் செய்யவேண்டிய தருணமெல்லாம் பிராட்டிமார்கள் திருவனந்தாழ்வானைவிட்டுத் தமது புஜத்தையே தலைக்கணையாக்ககொள்ளுகிறபடியை நினைத்து அந்தப் புஜகுணங்களைத்தாம் அநுபவிக்க ஆசைக்கொண்டவர்போலும், அஞ்சினவர்களாய் வந்து, அஞ்சலி முத்திரையைக் காட்டுகிறவர்களுக்கு தஞ்சமாகி அஞ்சேலென்கிற முத்திரையைக்காட்டித் தனக்கு முன் விரைந்துசென்று ஸாதுக்களை ரக்ஷிப்பதில் தனக்குத் துணையாகுவதைக்கண்டு உகந்து அதைத் தாழவிடாமல் உத்தமாங்கத்தில் சேர்த்துக்கொள்ளுகிறவர்போலும், தமது வலது புஜத்தைத் தலையின்கீழ் தலைக்கணையாக வைத்துக்கொண்டவராய், இந்த நம் திருவடிகளை சரணமடைந்து வாழுங்களென்று சேதனர்களுக்கு காட்டுகிறவர்போல் முழந்தாளளவு நீட்டின திருக்கைகளை உடையவராய், ஸம்ஸாரிகளுடைய ஸகல தாபங்களையுந் தணிப்பதற்காக கடாக்ஷங்களாகிற அமிருதங்களைப் பொழிகிறவராய், பச்சிலை மரத்தின் இலைகள் போல் கறுத்தும், வாழைமரங்கள்போல் நீண்டுருண்டு மழமழ-

ப்புடையவைகளாயிருக்கிற திருத்துடைகளால் பிரகாசித்து பீதாம்பரத்தினால் விளங்குகிற திருவடிகளைப் புண்டரீகரிஷி ஆராதிக்கும்படி நீட்டிக்கொண்டு கிழக்கு முகமாய், சயனித்திருக்கிற ஸ்ரீராப்திநாதனை புண்டரீகரிஷியானவர் கண்குளிர சேவித்தார்.

இப்படி கோடி சூரியப் பிரகாசத்தையுடையவராய் சேவை சாதிக்கிற ஸ்ரீராப்திநாதனை, புண்டரீகரிஷியானவர் பிரத்தியக்ஷமாய் சேவித்து பரமயோகிகளுக்கும் கிடைப்பதற்கரிதான இந்த பாக்கியத்தை நாம் பெற்றோமென்று மனமகிழ்ந்து பகவானுடைய ஸௌலப்பியகுணசக்தி வீடுபட்டு அடிக்கடி தண்டம் சமர்ப்பித்து தரித்திரன் நிதியைக்கண்டதுபோல் சந்தோஷித்த தான் சமர்ப்பிக்கும்படி பெருமாள் வைத்திருந்த விடுதியான தாமரஸ புஷ்பங்களை தன் குறைதீர பெருமாள் திருவடிகளில் தனது ஹிருதய கமலத்தைப்போல் அசையாமல் சமர்ப்பித்து அப்படியே திருமுடியிலும் சமர்ப்பித்து ஆநந்தபாஷ்பங்களை உதிர்த்துக்கொண்டு அஞ்சலி பந்தத்துடன் நின்று ஜயவிஜயீபவ, என்று தொடங்கி வேத மந்த்ரங்களால் ஸ்தோத்திரஞ்செய்தார் தேவர்கள் புஷ்பங்களை வருஷித்தார்கள், தேவதுந்துபிகளை முழக்கினார்கள், கந்தருவா கானஞ்செய்தார்கள், அப்ஸரஸ்திரீகள் நாட்டியஞ்செய்தார்கள். அப்பொழுது ரிஷியைப்பார்த்து எம்பெருமான் உமக்கு வேண்டிய வரத்தைக்கேளும் தருகிறோமென்று நியமிக்கையில் ரிஷியானவர் பின் வருமாறு பிரார்த்தித்தார்.

ஸ்லோகம்.

அநேகைவமஹாபாபோ ரூபேணகமலேக்ஷண
அத்ராவஸித்தியஸாந்நித்யம் குருயோகஸ்யாநுகா.

ஓ க்ஷீராப்தி நாதனே! இந்தப புவனியில் தேவரீருடைய அர்ச்சாவதாரங்களில் வீடுபட்டிருக்கிற என் மனதை மேலான தனது வடிவழகில் வீடுபடுத்தி மற்றொரு அர்ச்சாவதாரத்திலும் செல்லவேண்டாதபடி எனது ஆவலைத் தீர்த்ததாண

இந்த ரூபத்துடன் இந்த மல்லாபுர க்ஷேத்திரத்தில் எனக்கெ
ன்று ஆவிர்ப்பவித்தப்படியே சகல சேதனர்களுக்கும் எக்கால
த்திலும் சேவை சாதிக்கவேணும், பிராமண ரூபியாகி எழுந்த
ருளி கண்ணழகைக்காட்டி என் மனதை மயக்கி வசப்படுத்திக்
கொண்ட புண்டரீகாக்ஷனே! கடாக்ஷங்களாகிற அமிர்தங்களை
வர்ஷித்து ஸம்ஸார தாபத்தினால் பரிதபிக்கிற இந்த சேதநங்
களை உஜ்ஜீவிப்பிக்கவேணும். ஒருவராலும் முடியாத
சமுத்திரத்தைக் கையினாலிறைத்து வடியவைத்து புஜபலத்தை
க்காட்டி, ஒரு வருஷகாலமாய் சமுத்திரத்தை இறைத்து வாடி
நின்ற எனது விடாயைத் தணித்த மஹாபுருஷனே! இந்த சேத
நர்களுடைய பிறவிக்கடலை வடியவைத்து அவர்களுக்கு அபய
த்தை அளிக்கவேண்டும், ஆச்ரித ஸம்ரக்ஷணத்திற்காக, பரம
பதத்தினின்றும் திருப்பாற் கடலுக்கெழுந்தருளி அவ்விடத்தி
லிருந்து அந்த ரூபத்துடன் எனக்கெதிரில் ஆவிர்ப்பவித்து
என்னை அடிமை கொண்டதுபோல் இந்த ஸம்ஸாரி சேதநர்
களை அடிமைகொண்டு அவர்களுக்கு ஸகல அபீஷ்டங்களையுந்
தரவேண்டுமென்று பிரார்த்திக்க நாம் அப்படியே எக்காலத்தி
லும் இவ்விடத்தில் வஸிக்கிறோம், ஸ்ரீதேவி முதலான பிராட்
டிகளும் அநந்த கருடாதிகளும் நமது ஸந்நிதியில் நித்தியம்
வஸிக்கக்கடவர்கள். இந்த ரமணீயமான ஸ்தலத்தில் நமக்கு
வஸிக்க இஷ்டமுண்டாயிருக்கிறதென்று அருளிச்செய்கிற
சமயத்தில் பிரமன் முதலான தேவர்கள், ரிஷிகள், யக்ஷர் கின்
னரர், கிம்புருஷர், கந்தருவர் முதலான சகலரும் மஹா ஸம்பிர
மத்துடன் க்ஷீராப்திநாதன் சர்வ சுலபனாகத் தரையில் சயனித்
துக்கொண்டிருக்கிற ஸ்தலத்திற்கு வந்து தண்டம் ஸமர்ப்பி
த்து, ஸர்வேஸ்வரனை தேவரீர் பக்தனுக்காக சுலபனாய்ச்சயனித்
திருக்கிற பூமியைக்காட்டிலும் ஸத்தியலோக முதலான லோக
ங்களில் ஒரு விசேஷ மகிமையில்லை, அடியோங்களும் தேவ
ரீருடைய ஸௌலப்பிய குணங்களை அநுபவித்துக்கொண்டு
இந்த ஸ்தலத்தில் வஸிக்கிறோமென்று விண்ணப்பம் செய்ய
எம்பெருமான் புன்னகைசெய்து பிரமனை அழைத்து நீர் உமது

லோகத்தில் வஸித்துக்கொண்டு ஜகத்தை ஸ்ருஷ்டி செய்யும். இது நமது கட்டளையென்று நியமிக்கையில் இந்திரன் ஆலோசித்து அப்படி பிரார்த்திக்காமல் பிரதி வருஷம் சைத்திர மாதத்தில் விசாக நக்ஷத்திரத்தில் தேவரீரை அடியேன் வந்து ஆராதிக்கும்படி நியமிக்கவேண்டுமென்று பிரார்த்தித்தான். அப்படியே வரத்தைக் கொடுத்தார் இவ்வதிசயத்தைக்கேட்டு மல்லாபுரத்திலிருக்கிற சதாநந்தனென்கிற மஹாராஜனும் பட்டணத்து ஜனங்களும் அடங்காத ஆநந்தத்துடன் நமது பட்டணத்தில் க்ஷீராப்திநாதன் சுலபனாயெழுந்தருளினார். இதென்ன ஆச்சரியமென்று சொல்லி சிரசில் கைகளைகுவித்துக்கொண்டு ஓடிவந்து கடற்கரையில் ஒதுங்கின மஹாரத்தினம்போல் தரையில் சயனித்துக்கொண்டிருக்கிற க்ஷீராப்திநாதனைச் சேவித்து ஆனந்தக்கடலிலமிழ்ந்து பக்தியினால் பிச்சேறினவர்கள்போல் சிலர் துதித்தார்கள். சிலர்சிரித்தார்கள், சிலர் விஸ்ரந்தோடினார்கள், சிலர் ஆனந்தக்கூத்தாடினார்கள், சிலர்ஒருவருக்கொருவர் கைகளைப் பிடித்துக்கொண்டு எழும்பிக் குதித்தார்கள், மற்றும் சிலர் சிரஸில் அஞ்சலி பந்தமும் வாக்கில் வேத மந்திரங்களும் மனதில் எம்பெருமானுடைய குணாநுபவமும் கண்களில் ஆநந்தபாஷ்பங்களும், கால்களில் ஆனந்தக்கூத்துமாக பகவானைத் துதித்தார்கள். அதனால் திருவுள்ளமுகந்து எம்பெருமான்புண்டரீகரிஷிக்கென்று சுலபனாகத்தானவதரித்ததை தன் திருநாமத்தினால் எல்லோரும் அறியும்படியாக.

స్థలశాయీతి విఖ్యాతిర్యత్స్థలేశయితం మయా।

தாஸர்களே! புண்டரீகரிஷியை அநுக்ரஹிப்பதற்காக திருப்பாற்கடலில் ஜலசாயியாயிருந்தநாம்ஸ்தலசாயியாக ஆவிர்ப்பவித்தோமாகையாலிதுமுதல் நமக்குஸ்தலசாயியென்கிற திருநாமமாகக்கடவது என்று அருளிச்செய்யக்கேட்டு புண்டரீகரிஷிமுதலான எல்லாரும் ஆச்சரியப்பட்டு அமிருதம்போன்ற தான் ஸ்தலசயனனென்கிற திருநாமத்தைச்சொல்லி துதித்தார்கள்.

ஸகலலோகங்களுக்கும் நாதனாய் காரணபூதனாயிருக்கிற ஸ்தலசயன ஸ்வாமியே! தேவரீருடைய திருவடிகளில் நிச்சலமான பக்தியுடன் சரணமடைந்திருக்கிற மஹாநுபாவர்களே எங்கள் குலதெய்வம். உம்முடைய பக்தர்களிடத்தில் யார் அபராதம் செய்கிறார்களோ அவர்களுக்கு ஒருவிதகெதியுமில்லை. எவ்விடத்திலிருந்தாவது ஸ்தலசயனனென்று உமது திருநாமத்தை எவன் சொல்லுகிறானோ அவனது பாதகமலங்கள் தேவதைகளுக் சிரோபூஷணமாகின்றன. உமக்கு இஷ்டமானவஸ்துவும் பூஜையும் பக்தர்களேயன்றி வேறில்லை. ஆஸனம் சயனம் ஆடையாபரணங்கள் முதலானயாவும் பக்தர்களே, ஒருபக்தனுடைய நிமித்தமாயன்றோ திவ்யமான சேஷசயனத்தைவிட்டு இந்தப்புரியில் சயனித்துக்கொண்டீர், வாக்குக்கும் மனதிற்கும் எட்டாதான ஸௌலப்பியகுணத்தை ஒருசாஸ்திரங்களையும் கற்றுணராமல் தேவரீருடைய திரு அவதாரத்தினாலே பிரத்தியக்ஷமாய்க்கண்டோம், உமது பக்தர்களிடத்தில் எங்களுக்குப் பக்தியுண்டாகவேண்டுமென்று ஸ்துதித்து ஸ்தலசயனஸ்வாமியின் பாதத்திற்கு அருகில் அஞ்சலிபந்தத்துடன் முகமலர்ந்து நிற்கிற பரமயோகியான புண்டரீகரிஷியைச் சேவித்து புண்டரீகரிஷியே! ஸநகஸநந்தனாதிகளையும் அதிசயித்த தியானத்தின் பெருமையைப் பெற்றவராய் ஞானபக்தி வைராக்கியங்களுக்கு ஸ்தானமாய் எம்பெருமானுடைய கடாக்ஷத்திற்கு பாத்திரபூதராய் மகரிஷிகளுக்கும் அறிவதற்கு அரிதாயிருக்கிற பரவஸ்துவை சுலபமாக ஸாக்ஷாத்கரித்த தேவரீரை பூர்வபுண்ணியவசத்தினால் அடியோங்கள் சேவிக்கப்பெற்றோம். தாஸர்களான அடியோங்களை ரக்ஷிக்கவேணுமென்றும், திருப்பாற்கடலைவிட்டு எம்பெருமானிவ்விடத்திற்கு எழுந்தருளினசரித்திரங்களை அருளிச்செய்யவேண்டுமென்றும் பிரார்த்திக்கையில் புண்டரீகரிஷியானவர் பகவானுடைய விசித்திரசரித்திரங்களை நினைத்து ஆநந்தபரவசராய் ஆநந்தபாஷ்பங்களை உதிர்த்துக்கொண்டு தாமநுபவித்தபடியே பெருமானுடைய அவதாரத்தை விஸ்தார

மாக அருளிச்செய்து பொற்றாமரைக்கயத்தில் சாபவசத்தினால் முதலையாயிருந்த ஹரிப்பிரியமஹாராஜன் சொர்க்கத்தை அடைந்ததை அவன்புத்திரனாகிய சதாநந்தராஜனுடன் சொல்லுகையில் அவ்வரசன் தன்பிதாவினது சாபநிவர்த்திக்கு காரணமாயிருந்த புண்டரீகரிஷியின் திருவடிகளை பிடித்துக்கொள்ளுகையில் ரிஷியானவர் அரசனே! இந்தஸ்தலசயனசுவாமியினுடைய ஸன்னிதானத்தினால் பெருமைபெற்றிருக்கிற புண்டரீகபுஷ்கரணியில் ஸ்நானாதி அதின் கரையில் தானஹோமபித்ருதர்ப்பண ஜீவசிராத்த முதலானவைகளை, பகவத்பிரீதியாய்ச்செய்யுமென்றும், இந்த மல்லாபுரக்ஷேத்திரத்தில், கோ, பூமி, இரண்யதானங்களைச்செய்தால் அக்ஷயமாய் பலிக்குமென்றும், இவற்றிலும் முக்கியமான தான விசேஷத்தைச் சொல்லுகிறேன் க்ஷீராப்திநாதன் ஒருபக்தனுக்காக தானே எழுந்தருளி பூமியை உகந்து அதில் சயனித்தபடியால் இந்தக்ஷேத்திரத்தில் ஸ்ரீவைஷ்ணவ பிராமணருக்கு நன்றாய் பலிக்கிற பூமியை தானஞ்செய்தீரானால் உமது பிதுருக்களுக்கு உத்தாரகமாகும், பகவான் பக்தனிடத்தில் தன் ஸௌலப்பிய குணத்தை வெளியிட்ட ஸ்தலமான இந்த மல்லாபுரக்ஷேத்திரத்திற்கு (ஹரிஸௌலப்ய பிரகாசகம்) என்கிற பிரசித்தியுண்டாயிருக்கிறது, எம்பெருமானுடைய கடாக்ஷத்தை இச்சிக்கிறவனை இந்த க்ஷேத்திரத்தில் பகவானை, பக்தியுடன் ஆராதித்தானாகில் அவன் ஸகலைசுவரிய ஸித்தியையும் பெறுவான், இதைக் காட்டிலும் சூக்ஷமத்தைச் சொல்லுகிறேன். இந்த க்ஷேத்திரத்தில் பாகவதர்களை விசேஷமாய் ஆராதித்தானாகில் அவனுக்கு, பகவான் சீக்கிரத்தில் பிரஸந்நனவாரென்று அருளிச்செய்தார். அப்படியே மல்லேசுவரமஹாராஜன பரம பாகவதர்களான பிராமணோத்தமர்களை ஆராதித்து பூதானம புஷ்கலமான கிருஹதானம், இவைகளையும, மற்றும் அனேக தானங்களையும் ஸ்தலசயன சுவாமிஸந்நிதியில் செய்த புண்டரீகரிஷியின் நியமனப்படிக்கு பக்தியுடன் தண்டம் சமர்ப்பித்து அஞ்சலிபண்ணி வணங்கி நிற்கையில் ஸ்தலசயனஸ்வாமியானவர் ராஜாவைக் குளிர கடாக்ஷித்து நிர்

நமது பக்தர்களை நன்றாக ஆராதித்தீர் அதனால் நமக்கு உம்மிடத்தில் ஸந்தோஷமாச்சுது உமக்கு மங்களமுண்டாகக்கடவது வேண்டும் வரங்களைக் கேளும் என்று நியமித்தார். அதைக்கேட்டு பக்தியின் மிகுதியால் தழுதழுத்த வார்த்தையுடன் எக்காலத்திலும் தேவரீருடைய இந்த அற்புதமான சேவை அடியேனுக்கு உண்டாகவேண்டும் என்று பிரார்த்தித்தான், அத்தருணத்தில் பெருமாள் அப்படியே இந்த மல்லாபுர க்ஷேத்திரத்தில் நித்தியவாசத்தைத் திருவுளம்பற்றி ஸ்ரீவைகுண்ட லோகத்திலிருந்து ஆநந்த நிலயமென்கிற நமது விமானம் இவ்விடத்திற்கு வரக்கடவது என்று ஸங்கற்பிக்கையில் சூரியோதயமானது போல் பிரகாசித்துக்கொண்டு ஆநந்தமென்கிற நித்திய சூரியனால் அதிஷ்டாநம் செய்யப்பட்டதாயிருக்கிற கவாக்ஷங்களிழைக்கப்பெற்ற ஒரு விமாநம் வந்தது, அதைப் பிரதக்ஷிணம் பண்ணி சேவித்து கண்களை மூடிக்கொண்டு ஸ்தலசயனப் பெருமாளைத் தியானிக்கிற அரசனைப் பார்த்து புண்டரீகரிஷியானவர் பெருமாள் சன்னதிக்கு திருமதிள் கோபுரமுதலான கைங்கரியங்களைச் செய்யுமென்று நியமித்தார் அப்படியே மல்லேசுவர மஹாராஜன் எம்பெருமானுக்கு திருக்கோயிலையும் அதில் எம்பெருமானுக்கு ஸகலவித உபசாரங்களோடு கூடின திருவாராதனத்தையும் சைத்திர மாதத்தில் விசாக நக்ஷத்திரத்தில் மஹோத்ஸவாவப்ருதத்தையும் ததீயாராதனங்களையும் விசேஷமாய் செய்வித்தான். ஸகலமான சராசரங்களுக்கும் ஆதியான ஸ்ரீமந்நாராயணன் திருப்பாற்கடலைவிட்டு பக்தஜனரக்ஷணத்திற்காக மல்லாபுர க்ஷேத்திரத்தில் எல்லாருமநுபவிக்கும்படி சுலபமாக எழுந்தருளி ஸ்தலத்தில் சயனித்து சேவித்த மாத்திரத்திலேயே முக்தியை யளிப்பவனாய் பிரகாசிக்கையில் தேவர், தேவரிஷிகள், யக்ஷர்கள், கின்னரர், கிம்புருஷர், மனுஷ்யர், நாகர் முதலான எல்லோரும் வந்து தண்டம் சமர்ப்பித்து சகல பாபங்களையும் ஒழித்து சகல பலன்களையும் பெறுகிறார்கள்.

ஆசையால் ஓ பர்வதராஜபுத்திரியான அம்பிகையே! அந்த முக்திக்ஷேத்திரத்திலாகிலும் எனக்கும் ஆசையுண்டாயிருக்கிறது, சமுத்திரத்தினலைகள் நின்றும் சிதறி விழுகிற துளிகளையும் பூமியிலுள்ள தூளிகளையும் எண்ணலாம், ஸ்ரீஸ்தலசயனஸ்வாமியின் திருக்கல்யாண குணங்கள் எண்ணி முடிகிறதில்லை. ஒருவன் அப்படிப்பட்ட எம்பெருமானைப் பக்தியினால் சேவிப்பதற்குப் பயணப்பட்டு நடுவழியில் திரும்பினானாகிலும் அவன் முடிவில் வசிப்பது ஸ்ரீவைகுண்டலோகத்தில்தான், இந்த வசனங்களெல்லாம் ஸத்தியமே. இந்த ஸ்தலசயனமாஹாத்மியத்தைச் சுருக்கமாக உனக்குச் சொன்னேன். முழுதும் சொல்ல ஒருவராலும் சக்தியில்லை. அந்தப் புண்டரீகபுஷ்கரிணியில் ... டி மல்லாபுரக்ஷேத்திரத்தில் ஒருதினம் அல்லது ஒருநாழிகை ஒருவன் வசித்தானாகில் அவனது குலத்தை அவன் உத்தரிப்பித்தவனாகிறான் என்று பார்வதிக்கு ஈசுவரனுபதேசித்தாரென்று சூதபௌராணிகர் சொன்னதைக்கேட்டு அகஸ்தியமுனிவர் தானும் அந்த மல்லாபுரக்ஷேத்திரத்தில்வசிக்க ஆசைகொண்டு பிரயாணப்பட்டு இமையமலைக்குத்தெற்கில் ஐம்பதுயோஜனைதூரத்தில் வருகையில் அவ்விடத்திலிருக்கிற ஸம்வர்த்தம் என்கிற மலையினது சிகரத்தில் களகளவென்று ஒரு கூச்சலைக்கேட்டு அகஸ்தியர் நிதானிக்கையில் யமதூதர்கள் ஆயுதபாணிகளாக பயங்கரமூர்த்திகளாய்வந்து ஒரு பிராமணனை அடித்து இடித்துப்பாசங்களால்கட்டி இழுப்பதையும், விஷ்ணுதூதர்கள் வந்து அந்தப் பிராமணனை விரைந்து விடுவித்ததையும், அவர்களுக்கு அஞ்சி யமதூதர்கள் ஓடுவதையும், விஷ்ணுதூதர்கள் அவர்களைத் தடுத்து இந்த பிராமணனை நீங்கள் பிடித்து இழுப்பதற்கு காரணமென்னவென்று விசாரிப்பதையும், அதற்கு யமதூதர்கள் கைகளைக்குவித்தவர்களாய் நடுங்கிநின்று விஷ்ணுதூதர்களே! இவன் மஹாபாதகங்களைச்செய்தவன், பிராமணனாய் ஜனித்து ஸோமயாஜி என்கிறபிதாவினால் காலத்தில் உபநயனாதிகளைச் செய்யப்பெற்று வேதங்களை ஓதினான், பிதாமரித்தார், உடனே சூத்திரபிள்ளைகளுடன்கூடி

ஜந்துக்களைக்கொன்று காட்டில் திரிந்து ஒருவேடப்பெண்ணை விவாஹஞ்செய்துகொண்டு அவ்வேடர்களுடன் வேட்டையாடி அதனால் வயிற்றை வளர்த்து அநேகதுஷ்டகாலத்தையும் கழித்தான். பிராமணர்களுக்குப் பகைப்படுத்திக்கொண்டிருந்தான். இவனது பாரியையைவிட்டு அன்பு பரதாரங்களைப் பிடித்தான், பிரும்மஹத்தியைமுதலான மஹாபாபங்களை எளிதில்செய்தான். இவனது பாபசரித்திரங்களுக்கு பிராயசித்தங்களை விதிக்க சாஸ்திரங்களுக்கு சக்தியில்லை. இவன் பாபங்களெழுதும் பக்கங்கள் கணக்குக்குவரவில்லை. இப்படிப்பட்டவனை நீங்கள் அங்கீகரிப்பது தகுமோ? என்று சொன்னதைக்கேட்டு விஷ்ணு தூதர்கள் சொல்லுகிறார்கள், நீர் சொன்னதெல்லாம் உண்மையே. இவன் மேற்கு ஸாகரத்தின் கரையில் தீர்த்தராஜபுரத்தில் தருமவர்மாவென்கிற மஹாபிராமணனுடைய பாரியையான ஸத்யவதியை வசப்படுத்திக்கொண்டு அவளுடன் காடெல்லாம் திரிந்துவருகையில் பூர்வபுண்ணிய பலத்தினால் மல்லாபுரமென்கிற மஹாக்ஷேத்திரத்தை அடைந்து அவ்விடத்தில் வசித்து பின்பு கொல்லப்பட்டான். அதனால் அவனுடைய ஸகல விதபாபங்களும் நீங்கின. மஹா தேஜஸைப் பெற்றான். நீங்களினிமேல் இப்படி விசாரியாமல் செய்வது தகாதென்று சொல்லி அந்தப்பிராமணனை விமானத்தில் ஏற்றிக்கொண்டு போவதைக்கண்டுபார்த்து அகஸ்தியர் இதென்ன ஆச்சரியம் மஹாபுண்ணியகதையைக் கேட்டோம் என்று அதைவிட்டு ஒருமஹாவனத்தின் நடுவில் செல்லுகையில் அந்த இல்லைவனத்தில் அருந்தவஞ்செய்கிற ஆறு பெண்களைக்கண்டு தண்டம்ஸமர்ப்பித்து நீங்கள் யாரென்று வினயத்துடன் கேட்கையில் அப்பெண்கள் அகஸ்தியரைநோக்கி முனிவரே! நான் கெங்கை, ஆறு ரூபத்துடன் தவஞ்செய்கிறேன், முற்காலத்தில் முனிவர்கள் கூடி புண்ணியதீர்த்தங்களை ஸ்தாபிக்கையில் ஸகல தீர்த்தங்களினும் கெங்காதீர்த்தமான நான் உத்தமதீர்த்தமென்றும் எனக்கும் மேலானது மல்லாபுர க்ஷேத்திரத்திலிருக்கிற புண்டரீக தீர்த்தமென்றும் அந்த தீர்த்தத்திற்கு யானும் மற்ற தீர்த்தங்களும்

அடிமைக் குரியனவகளென்றும் சொன்னதைக் கேட்டு நான் மனம் கலங்கியிருக்கையில் இந்த தில்லைவனத்தில் சுப்பிரம ணியரைக்கண்டு இந்தசரித்திரத்தை சொன்னேன் அவர் அதைக்கேட்டு ஓ செங்கண்ணனே! முனிவர்கள் சொன்னது ஸத்தியந் தான் நீ விஷ்ணுபாதத்தில் ஆயிரப்பவித்தரளாகையால் எல்லாத்தீர்த்தங்களிலும் மேன்மை பெற்றவள் தான், ஆனாலும் மல்லாபுரக்ஷேத்திரத்திலிருக்கிற புண்டரீக புஷ்கரிணியானது மகிமையினால் எல்லா தீர்த்தங்களுக்கும் உத்தமமானது அதை நான் அறிவேன், முன் தாரகாசுரனைக் கொல்லுகையில் அந்த யுத்தத்தில் ஆயுதபாணியாய் யுத்தம்செய்துக் கொண்டிருந்த ஒரு பிராமணனை அறியாமல்கொன்றுவிட்டேன் அந்த பிரமஹத்தி என்னைப் பீடிக்கையில் எனது பிதாவான ஈசுவரனுடைய அனுமதியினாலே புண்டரீகபுஷ்கரிணியில் ஸ்நானம் செய்து அந்தத்தோஷத்தினின்றும் விடுபட்டேன் என்று சொன்னார்.

அதைக்கேட்டு பின்னும் நான் டரிசபித்து அந்தத் தீர்த்தத்திற்கு அடிமை செய்யப்படி ஒரு மந்த்ரத்தைச்சொல்லுமென்று கேட்டேன், அதில் ஸ்நானம் செய்யவென்று நியமித்தார், அதற்கு நான் சம்மதிக்கையிலே அதனாலே ஸ்ரீராமதாரக மந்திரத்தை ஆறுமுகங்களால உபதேசிக்க வந்தார். நான் அதற்கிணங்க ஆறு ரூபத்துடன் அந்த மந்திரத்தை உபதேசிக்கப்பெற்று அந்தப் புஷ்கரிணிக்கு அத்புதமான பெருமையைத் தந்தருளினேன் ஸ்ரீராமப்ரபுதனைத் தியானித்துக்கொண்டு தவஞ்செய்கிறேனென்று சொல்ல அதைக்கேட்டு அகஸ்தியர்க்கு அடங்கா ஆனந்தமும் ஆச்சரியமும் ஸ்ரீஸ்தலசயனஸ்வாமியின் கருணையினால் பக்தியுமுண்டாக அந்தத் தில்லைவனத்தில் தக்ஷபத்துவியாசனை தாம் வழிநடந்துபோய் மல்லாபுரக்ஷேத்ரஞ்சென்று அந்த மஹாநகரத்தின் செல்வங்களையும் மற்றும் அழகுகளையும் பார்த்துக் கொண்டே புண்டரீகபுஷ்கரிணியை அடைந்து அதனை வடகரையில் அசுபத்தாமாசிரமத்தில் அருந்தவம் செய்கிற முனிவர்களைத் தண்டம ஸமர்ப்பித்து விடைபெற்று

புஷ்கரிணியில் நீராடி பரிசுத்தராய் திருமண் காப்புகளைத்தரித்து திருமணித் தாவடங்களை அணிந்து மனதில் ஸ்ரீஸ்தலசயனஸ்வாமி குணங்களை அநுபவித்து வாயினால் திருமந்திரத்தை ஜபித்து தலையில் கைகளைக்கூப்பினவராய் இவ்வியாலயத்தை அடைந்து கோபுரத்வாரத்தில் தண்டம் சமர்ப்பித்து, த்வார பாலகர்களைச் சேவித்து உள்ளே புகுந்து பலிபீடத்தையும் சுவர்ண மயமான த்வஜ ஸ்தம்பத்தையும் சேவித்து, திவ்விய விமானத்தைத் தண்டம் சமர்ப்பித்து பிரதட்சணம் செய்து விமாநத்தின் த்வாரத்தை யடைந்து அங்கு சேவித்து, பக்தியே ஒரு வடிவுகொண்டாற்போலாகி மஹாநந்தத்திலமிழ்ந்து உள்ளே புகுந்து புண்டரீக வரதனை ஸ்ரீஸ்தலசயநஸ்வாமியைக் கண்குளிர சேவித்து அந்த வடிவழகில் ஈடுபட்டு வேத வாக்கியங்களால் ஸ்துதிசெய்தார். பக்த பராதீநனாகிய ஸ்தலசயனப் பெருமாள் அகஸ்தியரைக் குளிரகடாக்ஷித்து அவர் பிரார்த்தித்தபடியே தம் க்ஷேத்திரத்தில் அவரை நித்தியமும் வசித்துக்கொண்டு வைகாநஸவிதியை அநுசரித்து தம்மை நித்தியமும் ஆராதிக்கும்படியாகவும் நியமித்து பின்னும் அருளிச் செய்கிறார். அகஸ்தியரே! கேளும், ஆதியில் நம்மை இந்தப் புண்டரீக ரிஷியானவர் ஆயிரம் வருஷகாலம் ஆராதித்தார். பின்பு சதாநந்தமஹாராஜனுடைய புத்திரனாகிய தரும கோப்தாவென்னும் அரசன் ஆயிரம் வருஷகாலம் ஆராதித்தான். அந்தப் புண்டரீக முனியும், அந்த அரசனும் நமது பதத்தை அடைந்தார்கள். பின்பு நமக்கு தோழனாகியும் வாஹநமாகியுமிருக்கிற கருடன் என்னுடைய அநுக்கிரஹத்தைக்கோரி நெடுங்காலம் ஆராதித்து பலனைப்பெற்றார். அதாவது முன் ஒரு காலத்தில் கருடனை நம்ஸந்நிதிக்கு வரும்படி நியமித்தோம் அவர் அதிகவேகமாக ஓடிவருகையில் அவருடைய இறகுகளால் அறுக்கப்பட்டு வழியில் நமது பக்தனொருவன் கண்கலங்கி நிற்பதை நாம் பார்த்து கருடனுக்கு இறகு விழுந்து போகும்படியாக ஸங்கல்பித்தோம். பின்பு இந்த க்ஷேத்திரத்தில் வந்து நம்மை ஆராதித்து அவருக்கு இறகுகள் உண்டா

யினை — இந்த கருடனுக்குப் பின்பு கர்க்கர் என்கிற ஒரு முனிவர் சருகுகளைப் புசிக்கிறவராய் நமக்கு பாநவிகமாக ஆராதனைசெய்தார். இனிமேல் நம்மையே கெதியாகப்பற்றின அனேகம் தேவர்களும், யோகிஜர்களும் அயோகிஜர்களுமான நமது பக்தர்களும் நம்மை ஆராதிப்பார்கள். நாம் புண்டரீகரிஷியின் பிரார்த்தனைக்கு பராதீநனாகி இந்த க்ஷேத்திரத்தில் சர்வசுலபனாக வஸிக்கிறோமென்று பிரதிஜ்ஞை செய்திருக்கிறோமாகையால் நித்யவாசம்பண்ணுகிறோம். நீரும், புண்டரீகபுஷ்கரிணிக்கு வடகரையில் அசுவத்தாசிரமத்தில் வசித்துக்கொண்டு நம்மையும் நம்மைப்போல் நமது பக்தர்களையும் ஆராதிக்கக்கடவீர் என்று நியமித்தார். அப்படியே அகஸ்தியர் ஆராதித்துக்கொண்டிருந்தார் அந்த மல்லாபுர க்ஷேத்திரத்தில் ஸாரமானது பாகவதாராதனமாகையால் அதைப்பெறுகிறவர்கள் ஸ்தலசாயிகடாக்ஷத்திற்கு முக்கியபாத்திரமாகிறார்கள், இப்படி எம்பெருமானுடைய ஸௌலப்யகுணத்தை அறிந்தவர்களுக்கு ஒருவித பல சித்தியிலும் குறைவில்லை. அவர்கள் ஸகலசுபங்களையும் பெற்று வாழுவார்களென்று நாரதருக்கு பிரமதேவன் உபதேசித்தார். உடனே நாரதர் மல்லாபுரக்ஷேத்திரத்தில்வந்து புண்டரீகபுஷ்கரிணியில் நீராடி ஸௌலப்ய நிதியான ஸ்தலசயனப் பெருமானைச்சேவித்து அவருடைய ஸௌலப்யத்தில் ஈடுபட்டு மனங்குளிர்ந்து மஹாநந்தத்தைப்பெற்றார்.

---

இந்தப் புண்ணியமான மல்லாபுர க்ஷேத்திரமாஹாத்மியமானது கேட்டமாத்திரத்தில் ஸகலபாபங்களையும்போக்கும், இதை எழுதுகிறவர்களும் படிக்கிறவர்களும் உபந்நியாஸம்செய்கிறவர்களும் ஆதரிக்கிறவர்களும் இந்தப் புஸ்தகத்தை கிருகத்தில் ஸம்ரக்ஷிக்கிறவர்களும் ஸ்ரீஸ்தலசயனஸ்வாமியின் கருணையினால்

இந்த லோகத்தில் சகலசெல்வங்களுடன் வாழ்ந்து பரலோகத்தில் பிரமானந்தத்தைப் பெறுவார்கள்.

ஸ்ரீப்ரஹ்மாண்டபுராணம்

க்ஷேத்திரகாண்டத்தில் அகஸ்தியஸநகஸம்வாதமான

## மல்லாபுரக்ஷேத்திர மாஹாத்மிய சுருக்கம்

முற்றிற்று.

ஸ்ரீஸ்தலசயநபரப்ரஹ்மணே நம:

ஸ்ரீபூவராஹஸ்வாமிநே நம:

பூதத்தாழ்வார் திருவடிகளே சரணம்.

ஸ்ரீ: ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீஸ்தலசயனபரப்ரஹ்மணே நம:

# திருக்கடன்மல்லைக்

# கைங்கர்ய ப்ரகடனம்.

ஏனத் [illegible] நிலமங்கை யெழில்கொண்டான்
வானத்தவர் தம் முறையவன் மகிழ்ந்தேத்தி வலங்கொள்ளக்
கானத்தின் கடல்மல்லைத் தலசயனத் துறைகின்ற
ஞானத்தி னொளியுருவை நினைவாரென் னாயகரே.

விண்டாரை வென்றாவி விலங்குண்ண மெல்லியலார்
கொண்டாடு மல்லாகல மழலேற வெஞ்சமத்துக்
கண்டாரைக் கடல்மல்லைத் தலசயனத் துறைவாரைக்
கொண்டாடு நெஞ்சுடையா ரவரெங்கள் குலதெய்வமே.

## விஞ்ஞாபனம்.

ஸ்ரீயப்பதியாகிய ஸ்ரீமந்நாராயணன் பரமபதத்தில் நித்திய முக்தர்கள் "விண்ணாட்டவர் மூதுவர்" என்கிறபடியே தன்னிலும் மூப்பரும் ஒரு குறையுமில்லாதவருமென்றும லீலா விபூதியிலுள்ளாரோ ஸம்ஸாரஸ்தியில் மூழ்கி நோய்ப்படுகிறார்களே அவர்களுக்கு முகங்காட்டி அவர்கள் வியாதிகளைப் போக்கி அவர்கள் அபேக்ஷிதங்களைத் தந்தால்தான தனது "ஸௌலப்ய" மாகிய கல்யாண குணங்கள் சிறப்புபெறுமென்றும் திருவுள்ளம்பற்றி திருக்கடன்மல்லையை நாடிவந்து குடி புகுந்தது பரம பகவத் பக்தியில் சிறந்த பாகவதர்களனைவரும் அறிந்த விஷயமே! இம்மல்லாபுர ஸ்தலபுராணத்தை இரண்டாவது முறை வெளிப்படுத்தி பகவத் பக்தியிலீடுபட்டு ஸ்ரீஸ்தல சயனப் பெருமாளுக்கும் நிலமங்கைத் தாயாருக்கும் கரும்பூர்

இராஜகோபாலசாரியர் அக்ஷேயபாத்திரம் முதல்கொண்டு
யாசித்து இலமாயிருந்த டண்ணைக்கையை சுமார் 300 ரூபாயில்
புதுக்கி சமர்ப்பித்து விட்டார், ஷை சுவாமிகள்,—

நிலமங்கைத் தாயாருக்கு சுக்கிரவாரந் தோறும் உற்சவம்
நடந்து வருகிறபடியால் ஷை உத்ஸவ காலத்தில் தாயாருக்கு
நூதனமாக மகா மண்டபமொன்று இயற்ற எண்ணங்கொண்டு
தற்காலம் கருங்கல்வேலையில் சுமார் 500-ரூபா வரையில் செல
வழித்து ஷை கைங்கரியம பூர்த்தி செய்விக்க சுமார் ரூ 1,000
செல்லுமென்றும் யாசித்து தன் ஜீவதிசையிலே ஷை மண்டப
கைங்கரியம் பூர்த்தி செய்வித்து பாகவத கோஷ்டிகளுடன்
நேத்திரோத்ஸவமாக சேவிக்க இலேசித்திருக்கிறபடியால் அகி
ல பாகவதர்களும் ஸ்ரீமான்களும் கிருபாகடாக்ஷம் வைத்து
தானிய மூலமாயும் ரொக்கமாயும் எவ்விதத்திலாவதும் தாங்க
ளும் தங்கள் பந்துமித்திரர்களுக்கு புருஷகாரஞ்செய்து ஷை
கைங்கரியத்தை தலைக்கட்டி வைப்பீர்களென்று கருதி ஷை
ஸ்தல புராணத்தை கரும்பூர் இராஜகோபாலாசாரியர் சுவாமி
களுக்கு கைங்கரியார்த்தமாக அச்சிட்டனம் இதில் எவ்வித
அபசாரமிருந்தபோதிலும் க்ஷமித்து ஷை கைங்கரியத்தை
தலைகட்டிவைக்கத் திருவுள்ளமுள்ள ஸ்ரீமான்கள் யாவரும்
தாங்கள் தங்கள் சக்தியானுசாரம் கிஞ்சித்கரித்து ஸ்ரீஸ்தலசய
னப்பெருமாள் கிருபைக்கு பாத்திரராகி இஹபர ஸௌக்கியங்
களை யனுபவித்து பல்லாண்டு வாழ்வார்களாக.

திருக்கடன்மல்லை, 1905 வரு பிப்ரவரி 15உ.

இப்படிக்கு,
தாசானுதாசர்கள்.

ஓம்தத்ஸத்.



PAYNE AND CO., MADRAS.